[2011 ஜனவரி 12

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு, நானும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், இதுகுறித்து அதிகாரிகளோடு கலந்து பேசி, ஆவன செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினாலே, இரண்டு இலட்சம் பம்ப் செட்டுகளுக்கு, முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட அந்த இணைப்புகளுக்கு, இந்த ஆண்டு எப்படியும் மின்சார இணைப்புகள் கொடுத்துவிடுவோம்.

இரண்டாவது, ஸ்டார் மோட்டார்களைப் பற்றிச் சொன்னார்கள். ஸ்டார் மோட்டார்கள் வாங்கவேண்டுமென்று முடிவு எடுத்ததற்குக் காரணமே, சுதந்திர தின விழாவில் கொடியேற்றிவிட்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், மின்சாரத்தினை 20 முதல் 30 சதவிகிதம் சிக்கனப்படுத்துவதற்கு, மோட்டார்கள் புதுப்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே, 4 ஸ்டார், 5 ஸ்டார் மோட்டார்களைப் போட்டால்தான், 20 சதவிகிதம், 30 சதவிகிதம் efficiency கிடைக்கிறது என்று மின் வாரியப் பொறியாளர்கள் அரசுக்குக் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் அந்த மோட்டார்கள் வாங்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர், திரு. பெ. காமராஜ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

23—

பச்சைக்கல் படிமங்கள்

***5622—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 12]

கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாணிக்கபுரத்தில் பச்சைக்கல் படிமங்கள் வெட்டி எடுக்க குவாரி அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாணிக்கபுரத்தில் பச்சைக்கல் படிமங்கள் வெட்டி எடுக்க தற்சமயம் குவாரி அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.*

திரு. பெ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாணிக்கபுரம் பகுதியில், வைரக்கல்லுக்கு நிகரான விலைமதிப்புள்ள பச்சைக்கல் படிமங்கள் ஏராளமாக உள்ளன. அவை வெட்டி எடுக்கப்பட்டு, வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுமானால், அரசுக்கு மிகப் பெரிய வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பச்சைக்கல் படிமங்கள் வெட்டி எடுக்கும் குவாரிகள் அமைத்து, அந்தப் பகுதியில் தொழிற்சாலை அமைத்தால், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசுக்கு வருவாயைப் பெருக்கும்விதத்திலும், அந்தப் பகுதியில் வேலைவாய்ப்பை உருவாக்கும் விதத்திலும், பச்சைக்கல் படிமங்கள் வெட்டி எடுக்கும் குவாரி அமைத்து, அதையொட்டிய தொழில்கள் தொடங்குவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* நவரத்தின வகையைச் சார்ந்த பெரில் என்ற பச்சை நிறக்கல், கரூர் மாவட்டத்தில், கரூர், குளித்தலை மற்றும் கிருஷ்ணராயபுரம் வட்டங்களின் சில பகுதிகளில் காணப்படுகிறது. கரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இரும்புப்பட்டி, மேட்டுப்பட்டி, கீரனூர், கோடங்கிப்பட்டி, தேசியமங்கலம், முத்தம்பட்டி, கொமட்டேரி, மனகதி ஆகிய கிராமங்களில் விலை மதிப்புடைய கற்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாக, ஏற்கெனவே இப்பகுதிகளில் ஆய்வு செய்த இந்திய புவியியல் நில

அளவைத் துறையினர் மற்றும் இத்துறையைச் சார்ந்த வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், இத்தகைய கற்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக கிடைக்கின்ற காரணத்தினால், அதுவும் குறிப்பாக மழைக் காலங்களில் உழுகின்றபோது அவை மேலேயே கிடைக்கின்றன; அடியிலே, தோண்ட வேண்டிய அவசியம் இல்லாமல் மேற்பகுதியிலேயே கிடைக்கின்ற கற்கள் இவை. அவை தனியார் நிலங்களிலே கிடைக்கின்றன. தனியார்கள் இதற்காக ஏதேனும் சுரங்கம் அமைக்கவேண்டுமென்று அனுமதி கேட்டால், இந்த அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த ஊர்களோடு சேர்த்து, பன்னபட்டி ஊராட்சி, நல்லமுத்துப்பாளையம் ஊராட்சி, கீரனூர் ஊராட்சி, சேங்கல் ஊராட்சி, முத்துரங்கப்பட்டணம் ஊராட்சி போன்ற பகுதிகளில் விலை மதிப்புள்ள இந்த பச்சைக்கல் படிமங்கள் அதிகம் உள்ளன. இந்தப் பகுதிகளில் அரசு எடுத்துச் செய்யாத சூழ்நிலையில், சில தனியார்கள் கள்ளத்தனமாக வெட்டி எடுக்கும் வாய்ப்பு உள்ளது. இதைப் போக்கும் விதத்தில், அரசுக்கு வருவாயைப் பெருக்கும் பொருட்டு, அரசு சார்பாக நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று அமைத்து, அந்தப் பகுதிகளிலே ஆராய்ச்சி செய்து, விரிவான திட்ட அறிக்கை ஒன்றை தயார் செய்து, அதன் அடிப்படையில் குவாரி அமைத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9–50

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய அரிய வகை கற்களை விலைக்கு வாங்குபவர்களும், நில உரிமைதாரர்களும், பொதுமக்களும் இக்கற்கள் கிடைப்பது தொடர்பான தகவல்களை அளிக்க முன்வர விருப்பம் தெரிவிப்பதில்லை. ஆகவே, அவரவர்

2011 ஜனவரி 12]

நிலங்களிலே கிடைக்கின்ற கற்களை அவரவர்கள் சொந்தமாக்கிக்கொள்கிறார்களே தவிர, இது பற்றிய விவரங்கள் எதுவும் தெரியாத காரணத்தினாலும் அந்தப் பகுதிகளில் அங்கொன்றும், இங்கொன்றுமாக கிடைக்கின்ற காரணத்தினாலும் முழுமையாக இதிலே நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று, அங்கே இதுபோன்ற கற்கள் ஒரே இடத்தில் கிடைக்கின்றனவா என்ற பரிசோதனை செய்வதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளை மீறிச் செயல்படுகின்ற குவாரிகள், குறிப்பாக, விருதுநகர் மாவட்டத்தில் வி.ஆர்.பி. கிரானைட்ஸ், ஸ்டாண்டர்டு கிரானைட்ஸ் போன்ற குவாரிகள் மூடப்படுமா? அதோடு குவாரிகள் செயல்படுகின்ற இடங்களில் எந்த விதிமுறைகளின் அடிப்படையில் அந்தக் குவாரிகள் செயல்படுகின்றன என்பது மக்களுக்குத் தெரிகின்ற முறையில் விளம்பரம் செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரானைட் கற்களைப் பொறுத்தவரையில் தனியார் நிலங்களில் அவர்களே வெட்டி எடுக்க அனுமதி வழங்கப்படுகிறது. அரசு நிலங்களில் வெட்டி எடுக்கப்படுபவை டாமின் மூலமாக ஏலத்திற்கு விடப்பட்டு டெண்டர் மூலமாக விலை நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. எந்த இடங்களில் அத்துமீறி செய்கிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு கொடுப்பார்களேயானால் நிச்சயமாக அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் குன்றத்தூர் யூனியனுக்குட்பட்டிருக்கின்ற

[2011 ஜனவரி 12

கொல்லச்சேரியிலே ஆதி திராவிடர்கள் வீட்டு வசதி கல் உடைக்கின்ற தொழிலாளர் சங்கம், மக்கள் தலைவர் காமராஜர் அவர்களுடைய தலைமையில் அன்றைய உள் துறை அமைச்சராக இருந்த திரு. கக்கன்ஜி அவர்கள் திறந்து வைத்த அந்தக் கூட்டுறவுச் சங்கம் இன்றைக்கும் உயிரோடு இருக்கிறது. ஆனால், அவர்கள் கல் உடைத்த அந்த இடங்கள் மட்டும் மேய்க்கால் புறம்போக்காக இருக்கிறது என்ற காரணத்தினால் தடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அது குறித்து மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டு சென்றதற்குப் பிறகு, அந்த சொசைட்டிக்குச் சொந்தமாக ஏதேனும் நிலம் இருந்தால், பட்டா இடம் இருந்தால் கொடுப்பதாகச் சொன்னார்கள். பட்டா இடமிருக்கிறது என்பதை நாங்கள் documents மூலமாக நிரூபித்து அதற்காக மனு செய்து காத்திருக்கின்றோம். எல்லா விவரங்களும் கொடுக்கப்பட்டும், அங்கே இருக்கின்ற துணை இயக்குநர் இதுவரையிலும் அதற்கு எந்தவிதமான ஒத்துழைப்பும் கொடுக்காத நிலை இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து உடனடியாக, அந்த பட்டா நிலத்திலாவது, அங்குள்ள ஆதி திராவிட மக்கள் கல் உடைப்பதற்கு அனுமதி தருவார்களா என்று உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்த விண்ணப்பத்தினுடைய நகலை எனக்குக் கொடுத்தால் உடனடியாக மாவட்ட ஆட்சியர்மூலமாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

TRUTH ALONE TRIUMPHS